**1. 10,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின உறுப்பினர்களுக்கு பங்கு மூலதனம் மானியமாக வழங்குதல்**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்**, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின உறுப்பினர்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்திடவும் நகரக் கூட்டுறவு வங்கிகளில் சிறு தொழில், பண்ணை சாரா மற்றும் வணிகக் கடன் பெறும் திறனை அதிகரிக்கும் பொருட்டும், **10,000** ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின உறுப்பினர்களுக்கு பங்கு மூலதனம் மானியமாக ரூ.2,500/– வீதம் ரூ.250 இலட்சம் நிதி உதவி அளிக்க ஆணையிட்டுள்ளார்கள்.

40,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின உறுப்பினர்கள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில், கடன் பெறும் திறனை அதிகரிக்கும் பொருட்டு ரூ.10 கோடி பங்கு மூலதனம் மானியமாக வழங்க **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 23.8.2012** அன்று ஆணையிட்டுள்ளார்கள்.

## 2. 1000 மகளிர் உறுப்பினர்களுக்கு பங்கு மூலதனம் மானியமாக வழங்குதல்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்**, நகரக் கூட்டுறவு வங்கிகளில், மகளிர் உறுப்பினர்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்திடவும், அவர்களின் கடன் பெறும் திறனை அதிகரிக்கவும் 1,000 மகளிர் உறுப்பினர்களுக்கு ரூ.2500/– வீதம் பங்கு மூலதனம் மானியமாக ரூ.25 இலட்சம் வழங்க ஆணையிட்டுள்ளார்கள்.

**3. 2,000 மாற்றுத் திறனாளிகளுக்கு பங்கு மூலதனம் மானியமாக வழங்குதல்**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்,** தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகளில் உள்ள மாற்றுத் திறனாளி உறுப்பினர்களின் கடன் வாங்கும் திறனை அதிகரிக்கவும், அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திடவும் **2,000** மாற்றுத் திறனாளி உறுப்பினர்களுக்கு ரூ.**2500/–** வீதம் பங்கு மூலதனம் மானியமாக ரூ.**50** இலட்சம் வழங்க உத்தரவிட்டுள்ளார்கள்.

## 4. மலைவாழ் மக்களுக்காக 100 நகரும் நியாயவிலைக் கடைகள்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்,** மலைப்பகுதிகளில் வாழும் மலைவாழ் மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை இடையூறு இல்லாமல் விநியோகம் செய்யும் வகையிலும், எளிதில் அணுக இயலாத பகுதிகளில் வசிக்கும் மக்களின் நலனுக்காகவும், தாட்கோ நிதி உதவியுடன் 100 நகரும் நியாயவிலைக் கடைகள் அமைக்க ஆணையிட்டுள்ளார்கள்.

**5. மலைவாழ் மக்கள் மற்றும் ஊரக பகுதி மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை விற்பனை செய்ய 3 வாகனங்கள்**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்** மலை பகுதிகள் மற்றும் எளிதில் அணுக இயலாத ஊரக பகுதிகளில் அத்தியாவசியப் பொருட்களை மக்கள் இருக்கும் இடங்களுக்கே கொண்டு சென்று விநியோகம் செய்ய விழுப்புரம் மாவட்டத்திலுள்ள கிளாக்காடு மற்றும் மோட்டாம்பட்டி பெரும்பலநோக்கு சங்கங்களுக்கும், திருப்பூர் மாவட்டத்திலுள்ள இராவணாபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கும், ரூ.39.90 இலட்சம் மதிப்பீட்டில் 3 வாகனங்கள் வாங்க உத்தரவிட்டுள்ளார்கள்.

**6. 23 மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் தானியங்கி பணப்பட்டுவாடா இயந்திரங்கள் நிறுவுதல்**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்,** அனைத்து மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளும், வணிக வங்கிகளுக்கு இணையான சேவையை வழங்கும் பொருட்டு, வாடிக்கையாளர்கள் 24 மணி நேரமும் பணம் பெற ஏதுவாக ரூ.750 இலட்சம் செலவில் 50 இடங்களில் தானியங்கி பணப்பட்டுவாடா இயந்திரங்கள் நிறுவ ஆணையிட்டுள்ளார்கள்.

## 7. தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களில் 75 பாதுகாப்பு அறைகள் அமைத்தல்:

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 50** தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களிலும், **25** வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கங்களிலும் ரொக்கம் மற்றும் நகைகளைப் பாதுகாக்கும் வகையில், இரும்புக் கதவுடன் கூடிய பாதுகாப்பு அறைகளை ரூ.**375** இலட்சம் மதிப்பில் கட்ட ஆணையிட்டுள்ளார்கள்.

**8. தொடக்கக் வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களில் கண்காணிப்பு கேமராக்கள் நிறுவுதல்**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்,** தொடக்கக் வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்கள், தற்போது அதிக அளவில் நகைக்கடன் வழங்குவதால், அவற்றின் பாதுகாப்பு ஏற்பாடுகளை, வலுப்படுத்தும் நோக்கத்துடன் ரூ.106 இலட்சம் மதிப்பீட்டில் 200 சங்கங்களில் கண்காணிப்பு கேமராக்கள் நிறுவ ஆணையிட்டுள்ளார்கள்.

**9. கூட்டுறவு சங்க கட்டடங்களில் 118 சூரிய ஒளிவாங்கிகள் அமைத்தல்**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்**, கிராமப்புறங்களில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு தடையின்றி சேவை வழங்கிட, வேலூர், கரூர், திண்டுக்கல், நாகப்பட்டினம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில், முதற்கட்டமாக 118 கூட்டுறவுச் சங்கக் கட்டடங்களில் ரூ.261 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் சூரிய ஒளிவாங்கிகள் அமைக்க ஆணையிட்டுள்ளார்கள்.

.

## 10. தொடக்கக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் 3 சூரிய சக்திக் கொப்பரை உலர்கலன்களை நிறுவுதல்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்,** தென்னை விவசாயிகளுக்கு குறைந்த செலவில் தரமான கொப்பரைகள் தயாரிக்க, திருப்பூர் மாவட்டத்தில் உள்ள ருத்ராபாளையம், தேவனூர்புதூர், மானுப்பட்டி ஆகிய மூன்று தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் ரூ.**19.50** இலட்சம் மதிப்பில் சூரிய சக்திக் கொப்பரை உலர்கலன்கள் நிறுவ ஆணையிட்டுள்ளார்கள்.

## 11. கூட்டுறவு பண்டகசாலைக்கு கட்டட வசதி

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்**, தேனி மாவட்டத்திலுள்ள போடிநாயக்கனூர் கூட்டுறவு பண்டகசாலையின் வியாபாரத்தினை மேம்படுத்தவும், பொருட்களை சேமித்து வைக்க, சேமிப்பு வசதியை ஏற்படுத்தவும் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டடத்தை கட்ட ஆணையிட்டுள்ளார்கள்.

## 12. கூட்டுறவு பண்டகசாலைகளுக்கு அலுவலகக் கட்டடங்கள்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்,** விலைவாசி உயர்வினை கட்டுப்படுத்துவதில் பெரும்பங்காற்றி வரும் தொடக்கக் கூட்டுறவு பண்டகசாலைகளின் சேவையை மேம்படுத்தும் பொருட்டு சொர்ணபுரி, ஆரணி, பெரியகுளம், சக்கம்பட்டி, சங்கனூர், பாப்பநாயக்கன்புதூர் ஆகிய **6** கூட்டுறவு பண்டகசாலைகளில், அலுவலகக் கட்டடங்கள் மற்றும் சில்லரை விற்பனை வளாகங்களை **ரூ.120** இலட்சம் மதிப்பீட்டில் கட்ட ஆணையிட்டுள்ளார்கள்

## 13. தொடக்க கூட்டுறவு பண்டகசாலைகளை நவீனமயமாக்கல்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்**, சில்லரை வணிகத்தில் தனியார் நிறுவனங்களுக்கு நிகராக, கூட்டுறவு பண்டகசாலைகள் புதுப்பொலிவுடன் திகழ கடலூர், தஞ்சாவூர், சந்திரசேகரபுரம், பொள்ளாச்சி ஆகிய நான்கு கூட்டுறவு பண்டகசாலைகளின் சுயசேவைப் பிரிவுகளை ரூ.80 இலட்சம் மதிப்பீட்டில் நவீனமயமாக்க ஆணையிட்டுள்ளார்கள்.

**14. சென்னையில் 2 நகரும் நியாயவிலைக் கடைகள் அமைக்க வாகனங்கள் வழங்குத:**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்,** சென்னை மாநகரில் கூட்டுறவு நியாய விலைக் கடைகளில் கூட்ட நெரிசலை தவிர்க்கும் பொருட்டு, டியுசிஎஸ் மற்றும் பூங்கா நகர் மொத்த விற்பனை பண்டகசாலைகளுக்கு அத்தியாவசியப் பொருட்களை விற்பனை செய்வதற்காக ரூ.26.60 இலட்சம் மதிப்பீட்டில் 2 வாகனங்கள் வாங்க உத்தரவிட்டுள்ளார்கள்.

## **15. கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் கணினி எடைமேடைகள் அமைத்தல்**

வேளாண் பெருமக்கள் மற்றும் வியாபாரிகள் கணினி எடைமேடைகள் இல்லாத காரணத்தால் அவர்களுடைய விளைப்பொருட்களை உடனடியாக துல்லியமாக எடைபோட இயலாமல் சிரமப்பட்டனர். **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்,** வேளாண் பெரு மக்களின் துயரத்தை தீர்க்க பெருந்துறை, பவானி மற்றும் உசிலம்பட்டி கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் ரூ.57 இலட்சம் மதிப்பீட்டில் மூன்று கணினி எடை மேடைகள் அமைக்க ஆணையிட்டுள்ளார்கள்.

**16. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தில் உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்,** தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் சேமிப்பு வசதிகளை அதிகரிக்கவும், பொது மக்களுக்கு வழங்கும் சேவையை மேம்படுத்தவும், 1000 மெட்ரிக் டன் கொள்ளளவில் ரூ.177 இலட்சம் மதிப்பில் 3 புதிய கிடங்குகள் கட்டவும், கோயம்பேடு குளிர்ப்பதன மையத்தில் ரூ.145 இலட்சம் மதிப்பிலும், பேசின் பாலம் குளிர்பதன மையத்தில் ரூ.249 இலட்சம் மதிப்பிலும் உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த ஆணையிட்டுள்ளார்கள்.